ஆதிவாசி குழந்தைகளுக்குச் சலுகைகள்.

*135 வினு—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதி காடுகளில் வசிக்கும் ஆதிவாசிகளான காடர், முதுவாள், தோதர் குழந்தைகளுக்குக் கல்வி, உணவு, உடை முதலிய சலுகைகள் சரியாக வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில், அரிசன நல இலாகாவினுல் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் ஆதிவாசி மாணவர்களுக்கு உணவு, உடை ஆகியவை ஒழுங்காக வழங்கப்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. ராமசாமி : காடுகளிலே வாழ்கின்ற ஆதிவாசிமக்கள் மனிதரோடு ஒட்டி வாழ்வதற்கு முக்கியமானது கல்வி. அந்தக் கல்வி தான் அவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்து மனிதரோடு அவர்கள் ஒட்டிப் பழகுவதற்கும் பொது அறிவைப் பெற்று வாழ்க்கை நடத்துவதற்கும் உதவி செய்கிறது. ஆகவே அவர்களுக்கு இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து உதவிசெய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி மாணவர்களுக்கு உணவு, உடை தரப்படுகிறதா என்பது. ஒழுங்காகத் தரப்படுகிறது. எல்லாவகையினும் காலதாமதம் இல்லாமல் கொடுக்கப்படுகிறது. காலதாமதம் ஆகிறது என்று மாணவர்கள் தரப்பிலே இருந்து எந்தவித குறையும் சர்க்காருக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : ஆதிவாசிகள் அதிகப்படியாக இருக்கக் கூடிய பகுதிகளில் தனியாக தாசில்தார் அளவில் அதிகாரிகளை நியமித்து அவர்களுடைய மேம்பாட்டுக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆதிவாசிகள் மட்டுமல்லாமல் பிற்பட்ட வகுப்பினருக்கும் சேர்த்து அவர்களுடைய சீரமைப்புக்கான காரியங்களைத் தனி தாசில்தார் இருந்து கவனித்து வருகிருர்.

DR. H. V. HANDE : It is nearly twenty or twenty-two years since the State and Central Governments have been trying to improve the living conditions and standard of life of adivasis and hill tribes. The Minister has stated that a few scholarships have been given. I wish to know from the Minister the exact number of scholarships given and the number of Adivasis available. Have the Government taken stock and assessed the correct position as to what the liability on their part is ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் முழு விவரமும் சேகரித்துக் கொடுக்க முடியும்.

திரு. என். வரதராஜன் : பிற்பட்ட மக்கள், ஆதிவாசிகள் அபிவிருத்திக்காக மத்திய அரசிலிருந்து நிதி வருகிறதா ? வரவில்லை என்ருல் அதைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிருர்களா ?

[1968 மார்ச் 4

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்காரில் இருந்து நிதி வந்து கொண்டுதான் இருக்கிறது. வழக்கமாகத் தருகிற நிதியை இந்த ஆண்டு குறைத்திருக்கிருர்கள். ஏறத்தாழ 13 லட்சம் ரூபாயைக் குறைத்திருக்கிருர்கள். அதைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிருேம்.

கூட்டுறவுப் பண்ணை சாகுபடி

* 136 வினு—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வெ. முனுசாமி :
திரு. எஸ். இராமச்சந்திரன் : } மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி எங்கெங்கு வெற்றிகரமாக நடக்கிறது ?

(இ) எத்தனை ஏக்கர் நிலங்கள் கூட்டுறவுப் பண்ணை சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ஹரிஜனங்கள் பொதுமக்கள், முன்னுள் படைவீரருக்காக நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள், குத்தகைக்காரர் பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற தனிப்பட்ட வகைப் பண்ணை சங்கங்கள், மனநிறைவுதரும் வகையில் செயல்பட்டு வருகின்றன. கூட்டுப் பண்ணைச்சங்கங்கள் (Joint Farming Societies) தொகுதிப்பண்ணைச் சங்கங்கள் (Collective Farming Societies) போன்ற பிறவகைச் சங்கங்கள் இம்மாநிலம் முழுவதும் பரவலாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் பணி தேவையான அளவு செவ்வனே நடைபெறவில்லை.

(இ) இம்மாநிலத்தில் செயல்பட்டுவரும் 290 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களினுல் 27,909 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் விளைச்சலின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

திரு. கரு. சீமைச்சாமி : பொதுவாக, இந்தப் பண்ணைகள் சரியாக நடைபெறவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படியானுல் இதற்காக ஏன் அரசாங்கம் பணத்தை வீணுகச் செலவழிக்க வேண்டும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு வகையான சங்கங்களைப் பற்றிச் சொன்னேன். தனிப்பட்டவர்களுடைய பொறுப்பில் நடத்தப்படக்கூடியவை (இன்டிவிஜுவல் ஃபார்மிங் சொசைடிஸ்)—குத்தகைக்காரர்களால் நடத்தக் கூடியவை நல்ல முறையில் நறைபெற்று வருகின்றன. ஜாயிண்ட் ஃபார்மிங் சொசைடிசும், கலெக்டிவ் ஃபார்மிங் சொசைடிசும் சரியாக நடைபெறவில்லை. இந்த வகை சொசைடிகளை மீண்டும் ஆரம்பிப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரிக்கு அருகிலுள்ள விவசாயக் கூட்டுப் பண்ணை நிலங்கள் குத்தகைக்கு விடப்படுவதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்திருக்கிறதா ? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய விவரம் இல்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : கூட்டுறவுப் பண்ணையின் நன்மையைப்பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் 100 ஏக்கர் முதல் 200 ஏக்கர் வரை கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆங்காங்குள்ள விவசாயிகள் முன் வந்து அவர்களாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டால் நிச்சயம் இந்த அரசாங்கம் உதவி செய்யும்.